புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889)
ஆவணிமீ உஅ
ஸ்தாபனமானது.

..பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைவாய்ப்பகுதி: " ரூ 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:— ஒரு கலம் ரூ. 9-00
" அரைக்கலம் ரூ. 4-50
" கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சo. } யாழ்ப்பாணம்:—விபவஞு ஐப்பசிமீ கஙஉ, ( 1928 அக்டோபர் 29) திங்கட்கிழமை. { இலக்கம்—ருச.

உ

### கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனம் மகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உo. அரைரூத்தலுக்கு ரூபா கo. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ற,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 30.)

---

## விளம்பரம்.

—:o:—

கிறவுண் பிறக்றாசிருந்து காலஞ்சென்றுபோன ஆறுமுகம் கதிரவேலு அவர்கள் நடத்திய வழக்குகளின் பேரால் அவருக்குப் பணம் கொடுக்கவேண்டியவர்கள் எல்லோரும் அப்பணத்தைச் சீதாரி பிறக்றர் பொன்னையா காசிப்பிள்ளை அவர்களிடமே கொடுக்கவேண்டியதன்றி வேறெருவரிடமுங் கொடுக்கக்கூடாதென்றும் அப்பணம் அவருக்கே உடையதென்றும் இத்தால் அறிவிக்கிறேன்.

இதுவிஷயமாக முன் வெளிவந்த விளம்பரங்களெல்லாம் இதனால் அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், க. பொன்னம்பலம்.
2—10—28. காலஞ்சென்றுபோன
ஆறுமுகம் கதிரவேலு
அவர்களின் மரணசாதனத்
(M 8 1316) தர்ந்துவகாரன்.

---

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினோத்தரம். —விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும்
பிரதான இடங்கள்.

(1) சி. சு. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) S. P. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

---

## யாழ்ப்பாணம்
## கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடந்து வருகின்றது மேற் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாலும் பன்னீர்மரமும் நிற்கின்றமலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே மேற் மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
(Q. 113.) வல்வெட்டித்துறை

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918 ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்.
மூலநிதி 8 லட்சம் ரூபா
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,22,840.
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானல் 3 வீதம் வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி தாணியங்கள், சிலை முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித்தீர்க்கலாகும்)

இனனும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

மு. தாமோதரம்பிள்ளை
மனேஜர்.

(Y 65.)

---

## நோவினுல் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது எதாவது தைலத்தைப் பற்றியே. அதாவது சீக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம் அதுதான்.

## லிட்டில்ஸ் ஓரியெண்டல் பாம்

LITTLE'S
ORIENTAL BALM

ஆகித் தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

தலை வலி
நரம்பு வலி
இல் வாய்வு
துடைப் பிடிப்பு
வாதம்
சுளுக்கு
முதலிய நோய்களுக்கும்.

இதிற் கொஞ்ச நீ தடவை நிரம்பிய சுகங் கிடைக்கும்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

1—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 61.)

---

## விசேஷ இனும்.

உயர்ந்த மிலிடேரி காக்கி ட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8 மூன்று வாங்கினுல் 1 படுக்கை மப்ளர் இனும் 6 வாங்கினுல் ஒரு கம்பளிப் போர்வை இனும்.

புதிய மாதிரி! விலாசம்!

16 முழம் இமிட்டேஷன் சரிக்கை.

தோட்டி காசிப்பூசேலை!!

இனும்! இனும்!! இனும்!!!

இம்மாதிரியான அசல் தொட்டிப்பூபோட்ட சேலை ரூபா 100, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

எங்களுடை 22 காரட் ரோல்ட்கோல்ட் கவுட்சர்லாநதில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த திறமான 10 வருட உத்தரவாதமுள்ள



ரோல்ட் கோல்ட் ரிஸ்லெட் கடிகாரம் வாங்குபவர்களுக்கு மேற் சரிகைச் சேலை இனுமாக அனுப்பப்படும் சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு கைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான். தனியாகவாங்கினுல் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில் 6 புடவை வாங்கினுல் ஒருபுடவை இனுக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O,
Madras.

(Q 112)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹூ
ஐப்பசிமீ ௨௰உ திங்கட்கிழமை

## தீபாவலி.

நரகசதுர்த்தசி ஸ்நானமாகிய தீபாவலிக்கொண்டாட்டம் இந்த ஐப்பசிமீ 25உ சனிக்கிழமையிரவு 4 மணிக்கு மேல், அதாவது ஞாயிற்றுக்கிழமை (11—11—28) விடியற்பொழுதும். எனவே தீபாவலிக்கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமையாகும். இத்தீபாவலிப்பண்டிகை கொண்டாடப்படவேண்டியபடி கொண்டாடப்படவில்லையென்பதையும் இத்தப் புண்ணியதினத்திற் செய்யப்படும் அக்கிரமங்களையும், இதனைக்கொண்டாடவேண்டிய முறையையும் இப்பத்திரத்தில் முன்னர்ப்பன்முறை எடுத்துக்காட்டியுள்ளோம். இங்ஙனமாயினும் வருஷந்தோறும் இவற்றை அன்பர்கட்கு ஞாபகப்படுத்துவது ஆவசியகமாக விருக்கின்றது. தீபாவலியும் விரதமாகக்கொள்ள வேண்டிய ஒரு புண்ணியதினமென்பதையும் இது உண்டாட்டுக் களியாட்டிற்குரிய கொண்டாட்ட தினமன்றென்பதையும் நம்மனோர் யாவரும் உள்ளத்தில் நன்கு பதித்துக்கொள்ளுதல் வேண்டும்.

தீபாவலித்தினத்தன்று விடிய ஐந்துநாழிகைக்குமுந்தி நித்திரைவிட்டெழுந்து அவசியகருமம் முடித்துச் சுத்திசெய்துகொண்டு தம் வீட்டிலே தீபமேற்றித் தீபமுன்னிலையில் எண்ணெயிட்டு நீர்நிலையையடைந்து முழுகி இணைகோடிவஸ்திரந் தரித்துச் சந்தியாவந்தனம் முடித்துத் தம் குலதெய்வத்தை வணங்கி இல்லத்திற்கு மீண்டு வந்து இயன்றளவு ஏழைகட்கு அன்னமிட்டு அதிதியருடனும் சுற்றமித்திரருடனும் போசனஞ்செய்தல் வேண்டும். தீபாவலி விசேஷகாலத்திலே சுவாமிக்குச்சாத்தும் வண்ணம் பட்டுப் பரிவட்டம், எண்ணெய்க்காப்பின்பொருட்டு எண்ணெய் முதலியன முதலுளோ சிரத்தையோடு உதவுதல் வேண்டும். முழுகிக் கோடிவஸ்திரம் வாங்கி உடுத்தற்கு ஆற்றலில்லாத ஏழைகட்குக் கோடிவஸ்திரம் எண்ணெய் முதலியன கொடுத்தல் மகாவிசேடமாகும். அன்னதானம் அப்பொழுதைப் பசியை மாத்திரம் மாற்றுமாதலாலும், வஸ்திரதானமோ மானத்தைக் காத்துச் சிறிது நீடித்த காலத்திற்குப் பயன்படுதலானும் அன்னதானத்தை காட்டிலும் வஸ்திரதானம் பன்மடங்கு சிறந்ததெனலாம். இங்ஙனந் தீபாவலியை விதிப்படி அனுட்டிப்பதினால் தேகாரோக்கியம் செல்வம் புண்ணியம் முதலான நன்மைகளுண்டாகும்.

இதனைவிடுத்து இந்தப் புண்ணியகாலத்திலே, விதிக்கு மாறாக மாலைக் காலத்தில் முழ்கியும், உண்டபின் முழ்கியும், மதுபானஞ் செய்தும், மற்சமாமிசம் புசித்தும், குடிவெறியாற் சண்டையிட்டும், வெறி தலைக்கேறியமையால் தான் முழுகுதல் முடியாதாக, பிறர் பிரேதத்திற்குக் குளிப்பாட்டுவதுபோல் முழுக்காட்டக் கிடந்தும் இடர்ப்படுதல் அந்தோ! எத்துணை மதியீனம் தீபாவலிக்காலத்திற் பெரும் விபத்துக்களும் சிவமோசங்களும் சண்டையுங் கோலையும் பன்முறை நிகழ்ந்திருப்பதை எவரும்அறிவர். உலகத்திலேயுள்ள ஏனைய சாதியாரும் சமயத்தினரும் காலந்தோறும் எவ்வளவோ திருத்தமடைந்துவர, சீர்திருந்திய சாதாரணமும் உண்மைச் சமயத்தவரென்றும் இருக்கும் நம்மனோர் இன்னமும் வனவேடர் தாழுஞ் செய்தற்குக் கூசும் இச்செயலைச் செய்வரேல் நம்மை யார்தான் மதிப்பார்; யார்தான் பொருட்படுத்துவார்; யாம் ஈடேறுமாறு தெங்ஙனம். நம்மனோர் தம்பொருட்டு இத்தீச்செயலை விடப் பிரியப்படாவிட்டாலும் தம் அரும்பெறற் பிள்ளைகள் பொருட்டும் மற்றைச் சிறியார் பொருட்டும் இதனை உடனே விடவேண்டாமா. மற்ச மாமிச முண்ணாரும் மதுவுண்டு வெறிகொள்வாரும் யாரென்று ஆராயுமிடத்து மாமிசபோசனிகளின் பிள்ளைகளும் மதுபானிகளின் பிற்சந்ததியாருமாகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர் இந்தஒன்றினையாயினும் இப்பேதைகள் சிந்திப்பார்களாக. மேலும் தீபாவலியை முறைப்படி அனுஷ்டிக்க முடியாதவர்கள் இப்புண்ணியதினத்திலே மகாபாதகங்களைச் செய்வதைக் காட்டிலும், அறவே அநுஷ்டியாதொழிவது உத்தமமாகும்.

இத்தீபாவலி விஷயமாகச் சொல்லத்தக்கது இன்னுமொன்றுளது. கதர் உடையை விருத்திசெய்யும் நோக்கமாக மகாத்மா காந்தி இங்கே வந்தபோது, இலங்கைவாசிகளெல்லாரும் கதர்மயமாகவே காணப்பட்டனர். மாசற்ற அந்த மகானும் இலங்கைவாசிகளை மெத்த அதிகமாகமதித்தும் மீண்டனர். இங்குள்ளார் காத்திரப்பிரகாரம் இன்னுமொருமுறை மகாத்மா இங்கே வருவாராகில் முந்திய அபிப்பிராயத்தோடு மீண்டு செல்வாரென நாம் காத்திருத்தல் முடியாது. ஆதலால் அந்தப் பெரியாரின் நன்னோக்கத்தின்படி இயன்றவரையில் இத்தீபாவலித்தினத்திற் கதர் அணிந்துகொள்வது நன்றாம்.

## சிவஞான போதம்.

(மூன்றும் பாகம்.)

வண்ணை, ஸ்ரீ வை. இராமநாதன் அவர்களால்
அனுவதித்துப்
பிரசுரஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 32-ம் இலக்க
இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—எ.

*யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா*

முதற் பாடம்:—*சிவம் அசத்தினை அறியாது.*

சிவத்தின் அறிவு வியாபக அறிவாகும் இவ்வியாபக அறிவோ, எல்லாப் பொருள்களையும் ஒரேகாலத்து ஒருசேர அறியும் அறிவாகும். இவ்வறிவு எதையும் தனித்து அறியாது இது எதையும் சுட்டி அறியாது இது சுட்டிறந்து நின்றே அறியும். பொருள்களை, இது குடம், இது ஆடையென்று அறிவதுபோல அறியாது. பொருள்கள் இவ்வியாபக அறிவின்கண் விளங்கி, பிரிந்து, சுட்டாகித் தோன்றா. இப்பொருள்கள், இவ்வறிவின் முன் பிரகாசப்படாமல் சூனியமாகத் தோன்றும். [சூனியம் என்பது இன்மையைக் குறிப்பதன்று. விளங்கித் தோன்றாமையையே குறிக்கும்.]

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் சுட்டுப் பொருள்களென்றும், அசத்து என்றும் கண்டாம் எனவே வியாபக அறிவின்முன் அசத்துப் பொருள்கள் யாவும் சூனியமாகவே முடியும். "யாவையுஞ் சூனியம் சத்தெதிராகலின்" என்று இச்சூத்திரம் உணர்த்தியவாற்றை நோக்குக. ஈண்டுச் 'சத்து' என்பது உண்மைப்பொருளாகிய சிவத்தை. ஆறாஞ் சூத்திரம் இச்சத்தையே "சிவசத்து" என்று கூறிற்று. இச்சிவசத்து, சடப்பொருள், வியாபகப்பொருள் எல்லாவற்றிலும் வியாபித்து நிற்பது

இனி இத்தகைய வியாபக அறிவுடைய சிவம் எவற்றையும் அறிய முடியுமா வென்பதை ஆராய்வாம்

சிவசத்தின் அறிவை நோக்க, எல்லாப் பொருள்களும் சுட்டுப் பொருள்களாகும். எதுவும் அதன்முன் விளங்கித் தோன்றாது. எதன்பாலும் அதற்கு அனுபவ அறிவு இல்லை வியாபக அறிவே யுண்டு. இவ்வனுபவ அறிவு இன்மையையே இச்சூத்திரம் 'சத்தே அறியாது' என்று உணர்த்தும்

ஆனால், சிவத்தால் அறியப்படாத பொருள் உண்டென்னின் அச்சிவத்திற்கு இழுக்கன்றோவெனின், அன்று. சுட்டுப் பொருள்களையும் சிவம் அறிவதனால், ஒருகாலத்து ஒன்றனையே அறிய வேண்டும். அதாவது ஒன்றனை அறியும்போது மற்றையவற்றை மறத்தல்வேண்டும். இவ்வாறாக அறிவதே சிவத்திற்கிழுக்காகுமன்றி, எதன்பாலும் அதற்கு அனுபவ அறிவு இல்லாமை இழுக்காகாது; மேம்பாடேயாகும் இதுவன்றிச் சிவத்தினறிவு பேரறிவாக, சுட்டறிவு சிற்றறிவாக, சுட்டறிவால் அறியப்படுவதைச் சிவம் அறியாதென்பது பொருந்துமாவெனில், பொருந்தும். வியாபக அறிவிற்கும் சுட்டறிவிற்கும் அளவில் மாத்திரம் வித்தியாசமென்பதன்று; தன்மையிலும் வித்தியாசமே. ஒன்று வியாபித்தன்றி அறியாது: மற்றது சுட்டியன்றி அறியாது. இவ்விரண்டும் ஒன்று அறிவதை மற்றது அறியவேண்டுமென்பதின்று சிவம் அசத்துப்பொருளை அறியாதென்பது எவ்வாற்றானும் பொருந்தும். இக்கருத்துக்களை யெல்லாம் தொகுத்தே இச்சூத்திரம் "யாவையுஞ் சூனியம் சத்தெதிராகலின் சத்தே அறியாது" என்றுணர்த்தும்

இரண்டாம் பாடம்.— *அசத்துப்பொருள் ஒன்றையுமறியா.*

அசத்துப் பொருள்கள் யாவும் சடமென்றும். அவற்றிற்கு அறிவில்லை. அவைகள் ஒரு பொருளையும் அறியா சத்தாகிய சிவத்தினையும் அறியா. ஆனால் உயிரால் அதிட்டிக்கப்பட்ட கருவிகள் அறியும் என்று ஆறாஞ் சூத்திரம் கூறிற்று. அதன் கருத்து, கருவிகளே அறியும் என்பதன்று, அவற்றைக் கொண்டு உயிரறியுமென்பதும், அதுவும் உயிர் அவற்றை யதிட்டித்தால் மாத்திரம் என்பதுமே ஆனால், உயிர் கருவிகளைக் கொண்டறியும் அறிவைப் பாசஞானமென்றும் பாசஞானமென்றால் பாசப்பொருள்கட்கு அறிவுண்டென்பதின்றன்று பாசப்பொருள்களின் சகாயத்தால் உயிர் அறியும் அறிவே பாசஞானமாகும் மேற்கூறிய கருவிகள், சுட்டறிவோடு கூடிய உயிராலதிட்டிக்கப் பட்டகாலத்து, அறியாவென்றானும், சுட்டறிவினின்றும் நீங்கிய வியாபகமாய் நின்று அறியும் உயிராலதிட்டிக்கப்பட்ட காலத்தும் அறியாவாவெனின்: அறியா. சடப்பொருள்கள் என்றும் சடமே எக்காலத்தும் சித்தாகமாட்டா என்றும் அறியா. இச்சங்கைகளை நீக்கவே, இச்சூத்திரம், "அசத்து இலது அறியாது" என்று உணர்த்தும் ஈண்டு "இலது" என்பதன் முன் "அறிவு" தொக்குநின்றது "அசத்து அறிவு இலது, ஆதலின் அறியாது" என்பது வசன நடை.

மூன்றாம் பாடம்.— *உயிர் சத்து அசத்துக்களாகிய இருவகைப் பொருள்களையும் அறியும்.*

சத்து அசத்தினை அறியாதென்றும்; அசத்து ஒன்றனையு மறியாதென்றும்; இச்சத்து அசத்துக்கள் யாதானுமொன்றாலறியப்பட வேண்டுமென்றும் கண்டாம். ஆகவே இவ்விரண்டையும் அறிவதெது. ஆராய்வாம்.

உயிர் அசத்துப் பொருள்களை யறிவதை அனுபவத்திலறிவோம் இதைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. சத்தினை அறிவதெது? சத்தினை உயிர் அறியுமா; இதையே நாம் ஆராய வேண்டும்.

இவ்வுயிரினறிவு பெத்த காலத்துச் சுட்டறிவென்றும்; சத்து வியாபகப் பொருள் என்றும், கண்டாம். எனவே உயிர், பெத்த காலத்தில் சத்தினை அறிய முடியாது என்பது பெறப்படும். என்றாலும், உயிர் எக்காலத்தும் சத்தினை அறிய முடியாது என்பது இல்லை. பெத்தத்தினின்றும் நீங்கிய உயிர் சிவத்தோடு சிவமாய் நின்று அறியும் என்றும், அவ்வாறறியும்போது வியாபகமாய் நின்று அறியும் என்றும் கண்டாம் இவ்வாறு அறியும்போது வியாபகப் பொருளாகிய சிவத்தினையும் அறிதல் கூடும் என்று முடியும்.

இம்முடிபையே இச்சூத்திரம் "இருதிறனறிவுளது..........ஆன்மா" என வுணர்த்தும். ஈண்டு "இருதிறனறிவுளது" என்னும் வாக்கியம் மூன்று வேறு வேற்றுமைத் தொகைகளாக நின்று மூன்று வேறு பொருள்களைத் தரும். இப்பாடத்தில் இரண்டாம் வேற்றுமைத் தொகையாக நின்று, 'இருதிறன்களாகிய சத்து அசத்து இரண்டினையும் அறியும் அறிவை யுடையது ஆன்மா', என்னும் பொருள் தந்தது.

---

## காலநிலை.

மழை இடையிடையே தூறுகிறது. கடும் வெய்யிலும் எறிக்கின்றது. சென்ற இரு இரவுகளாகப் பனி பெய்கின்றது. இப்பொழுது வெய்யில் எறிப்பதினால் கமக்காரருக்குப் பெரும் நன்மையுண்டு.

## கொள்ளைநோய்.

சிலதினங்கட்குமுன் கொழும்பிலிருந்து வந்து வண்ணார்பண்ணை கிழக்கில் பிளேக் நோயால் மாண்டவனைப் பிரேத பரிசோதனை செய்த சமயத்தில் டக்டருக்குத் துணையாக நின்று அப்பிரேதத்தையும் கொள்ளை நோயால் இறந்த வேறு பிரேதங்களையும் வெட்டிய கூலிக்காரனொருவன் கொள்ளைநோய் வைத்தியசாலையில் பிளேக்நோயால் மாண்டான்.

## புகைரத மோட்டர் பஸ்

நேற்று (28-10-28) காலை 11 மணிவரையில் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேயன்துறைக்குப் புறப்பட்ட புகைரத மோட்டர் பஸ் மருதனார் மடத்துக்குச் சமீபமாகச் செல்லும்போது தண்டவாளத்தினின்றுந் தவறி ஓட முடியாமல் நின்றுவிட்டது. அதிகாரிகள் அதனைப் பழையபடி தண்டவாளத்தில் ஏற்றும்படி முயற்சி செய்தபோது ரதத்தின் அச்சு ஒடிந்துவிட இதனாற் சிலமணிநேரம் பாதை தடைப்பட, கொழும்பிற்குப் போகும் பின்னேர ரதம் சில மணித்தியாலங்கள் சென்றே புறப்பட்டது. மோட்டாரதம் ஒருவாறு பாதையினின்றும் அகற்றப்பட்டதாம்

## துவிசக்கிரம் நொருங்குண்டமை.

நேற்று (28-10-28) பின்னேரம் நாலரை மணிவரையில் 541-ம் இலக்கங் கொண்ட மோட்டர்பஸ் யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் வண்ணார்பண்ணைத் தபாற்கந்தோர் இரண்டிலும் தபால் எடுத்துக்கொண்டு வட்டுக்கோட்டைக்குச் செல்லும் மார்க்கத்தில் சோனகதெரு ஐந்துசந்தியில் இருவர் ஒரு துவிசக்கிரத்தில் ஏறிச் செலுத்திக்கொண்டு வந்தவர்கள் எதிர்ப்பட்டனர். மோட்டர்பஸ் தங்கள இருவரையும் துவிசக்கிரத்தையும் முடித்துவிடுமெனக் கண்ட இருவரும் உயிரைக் காக்கும்படி துவிசக்கிரத்தை விட்டுப்போட்டுக் குதித்தோடிவிட்டனர். துவிசக்கிரம் நுண்ணிய துண்டுகளாய் நொறுங்குண்டபடி பஸ்ஸின் கீழ்க்காணப்பட்டது. இருவரும் அருந்தப்புத் தப்பினரெனலாம். பஸ்ஸும் துவிசக்கிரமும் அந்த நிலையில் முறையே நிற்கவும் கிடக்கவும் தலைமைக்காரன் துவிசக்கரத்தை ஊர்ந்துவந்த இருவரையும் மறித்து வைத்துக்கொண்டு பொலிசாருக்குத் தெரிவித்தார். குறித்த இருவரும் யாரென்று நமது பத்திரிகைப் பிரதிநிதி விசாரணை செய்தபொழுது அவர்கள் ஆரியகுளத்தடியில் வசிக்கும் கழுவாலிபர்களென்றும் மது விடாய் தீர்க்கும்படி ஆனைக்கோட்டைப் பக்கஞ் சென்று மீண்டுவரும்போதே இந்த அபாயத்திற் காளாயினரென்றும் அறியலாயினர். சோனகதெருவிலுள்ள இந்த ஐந்துசந்தியில் இப்படி எத்தனையோ முறை வண்டி அபாயங்கள் இதற்கு முன்னரும் நேர்ந்துள்ளன இந்த மார்க்கமாகப் போக்குவரவு செய்யும் வண்டிகள் மோட்டாரதங்கள் பஸ் என்னுமிவைகள் யாழ்ப்பாணத்தில் வேறு எந்தச்சந்தியினுமில்லையெனலாம். ஆதலால் அதிகாரிகள் ஒரு பொலிசை இச்சந்தியில் நிற்கச்செய்து ரதங்களின்போக்குவரவை அவதானப்படுத்துவது ஆவசியகமாம்.

## திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கம்.

நிகழும் விபவ வருஷம் புரட்டாதி மாசம் 22-ந் திகதி (7-10-28) ஞாயிற்றுக் கிழமை யன்று பிற்பகல் 6மணியளவில் ஸ்ரீசண்முக வித்தியாலயத்தில் பிரம. ஸ்ரீ சிவ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களின் தலைமையிற் தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அத்தருணம் காரியதரிசியின் புதல்வி ஸ்ரீமதி. ப கு காந்திமதி அம்மாளால் சென்ற கூட்ட வர்த்தமானம் வாசிக்கப்பட்ட பின் ஸ்ரீமாக். செ. சின்னத்தம்பி அவர்களால் (காரைக்கால் அம்மை) சரித்திரத்தைப் பற்றி ஓர் சொற்பொழிவு செந்தமிழ் நடையில் நிகழ்த்தப்பட்டது. பிரமஸ்ரீ. இ கு. பூரணத்தேஸ்வரக் குருக்கள் அவர்களாலும, ஸ்ரீமதி. ப. கு. காந்திமதி அம்மாளாலும் ஸ்ரீமதி. அ. விசாலாட்சி அம்மாளாலும் குறிப்புரை கூறப்பட்டபின் அக்கிராசனரின் குறிப்புரையோடும் தேவார பாராயணத்துடனும் கூட்டம் 8மணி யளவில் சமாப்தியாயிற்று.

கடித.

## வாழைச்சேனை சைவவித்தியாலய வாணி பூசை.

சென்ற 1928-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதியாகிய விபவ வருடம் ஐப்பசிமாதம் 4-ந் திகதி சனிக்கிழமை யன்று மாலை 6மணியளவில் சைவ வித்தியாசாலையில் நாமகட்குக் கும்பாதானஞ் செய்யப்பட்டது. அத்தருணம் சைவ நன்மக்களாயுள்ளோர் அம்பாளின் அருள் பெறவேண்டி பெரும் பொருள் செலவிட்டு குறித்த 4-ந் திகதி சனி வாரந் தொடக்கம் 7-ந் திகதியாகிய மங்கலவார விஜயதசமி முடியுமட்டும் ஊரவர்கள் நன்மங்கலமாகவும், சுத்தமாகவும், ஒழுகினர். இவ்வித பத்தி வைராக்கியமுடைய மேன் மக்கள் இவ்வூரிலிருப்பதை நோக்கவே மனமானது குதூகலமடைகின்றது. குறித்த 4-ந் திகதி தொடக்கம் 7-ந் திகதி வரையும் நாமகட்குத்தவறாது வழிபாடியற்றி இறுதியில் கலைமகள் பூசையானது வாத்தியங்களுடன் வெகு விசேடமாக நடத்தப்பட்டது. அடுத்த நாளாகிய மங்கலவாரத்தன்று 12மணி யளவில் நாமகட்குப் பூசை செய்து புதுப் பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். பின்னர் முச் சந்திகட்கும் வைக்கப்பட்ட கும்பங்களைச் சிரமேற்கொண்டு ஊர்வலஞ் செய்து கும்பஞ் சொரியப் பட்டது. வீதிகளெல்லாம் அலங்கரிக்கப்பட்டு வாயில் தோறும் பூரண கும்பங்கள் வைக்கப் பட்டிருந்தன. ஊரவர்களிற் பெரும்பாலானோர் விஜயதசமி விரதமிருந்து கும்பஞ் சொரிந்த பின்னர் தேவாலயபூசைகண்டு அம்பாளின் அருள் பெற்றுத் தத்தம் இல்லங்கட்கேகினர். சைவசமயமும், சைவ நன்மக்களும் சைவகலாசாலையும் சதாகாலமும் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனும் அம்பிகை அண்ணல் அருள் புரிவாராக.

—கடித.

## உருப்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.

இப்பத்திரிகையில் முன்னறிவித்த வண்ணம் மேற்குறித்த கலாசாலை ஆரம்பம் விஜயதசமியாகிய சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணி யளவில் சைவாபிமானிகள் பலர் குழுமியிருக்க உரிய சைவ முறைப்படி செவ்வனே நடைபெற்றது. பாலியர் தேவாரமோதவும், சபையார் அரகர வென்னுமோசையிடவும், அந்தணர் சரசுவதி பூசையை விதிப்படி புரியவும்,

மேழு வாத்தியம் முழங்கவும், அத்தருணத்தங் குன்றாருள்ளம் சைவாபிமானம் பொங்கித் ததும்பிப் பரவசப்படவும், புதிய மாணவர் எம் பூர்வீக முறைப்படி அட்சராப்பியாசஞ் செய்யவுங் கண்ட காட்சி எமக்கெல்லாம் பேரானந்தத்தை விளைத்தது. இந்துக்கல்லூரி அதிகார சபையின் காரியதரிசியாகும் ஸ்ரீ. அ. அம்பலவாணரவர்கள் கேள்விப்படி உரும்பராய்ச் சைவாங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பிரமஸ்ரீ. அ. சீதாராம ஐயரவர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக ஊரவர்கள் செய்ய வேண்டியன வற்றையும் பாடசாலை அதிகாரிகள் செய்ய நினைத்திருப்பவைகளையும் தெள்ளிதில் விபரித்து எவரையும் உற்சாகப் படுத்தினர். கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலைத் தலைமை யாசிரியர் ஸ்ரீ. வி. சிதம்பரப்பிள்ளையவர்கள் சில குறிப்புரை கூறிய பின், புதிய கலாசாலையிற் கண்ணுங் கருத்து முடைய ஸ்ரீ. ஆ. வேலுப்பிள்ளையவர்கள் புரிந்த அரியஉபந்நியாசம் அவர் பரோபகாரம், பாஷாபிமானம், சமயாபிமானம் முதலிய பெருங்குணங்களைய மாகவே உள்ளார் என்பதைக் காட்டுகின்றது. இக் கட்டிடம் பூர்த்தியாகப் பெருதவி புரிந்த உரும்பராய் மலாய ஐக்கிய சங்கத்தாருக்கும் மற்றும் உள்ளூர்ப் பரோபகாரிகளுக்கும், இம் முயற்சிக்கு சிறந்தவோர் தூண்டுகோலாயிருந்த ஸ்ரீ. வேலுப்பிள்ளை யவர்கட்கும் நாமென்றும் கடப்பாடுடையேம். அன்றே ஏறக்குறைய 30 புதிய மாணவர் சேர்ந்தனர். தற்போது 90 மாணவர் இங்குக் கற்கின்றனர். சைவப் பெற்றோர் தமது சிறுவரை புதியபாடசாலைக் கனுப்பி நன்மையடைவார்களாக. சந்திரசேகரனும் சிவபிரான் சந்திரோதய வித்தியாசாலை சந்ததமும் சந்திரோதயம்போல சால விளங்க சர்வாநுக்கிரகம் புரிவாராக. கடித.

## மலையாளர் வரலாறு.

மலையாளர், மலையகர் என்னும் இருபெயர்கட்கும் இலக்காயிருக்கும் யாழ்ப்பாணவாசிகள் முன்னாளிலேயே மலையாளத்திலிருந்து வந்தவர் என்றும், தமிழ் மக்கள் அல்லர் என்றும் தப்பித வபிப்பிராயங் கொண்டார் பலர் எம்மூரில் உளர். அன்னவர் சேலம், திருச்சிராப்பள்ளி, வடஆறுகாடு ஆதிய தமிழ் நாடுகளில் வசிக்கும் மலையாளிகள் என்னும் பெயருடைய தமிழ் மக்களைச் சற்றும் அறியார் என்பது தெளிவு. ஆதலான், அம்மலையாளிச் சாதியைப் பற்றிச் சிறிது கூறுதல் விரும்பப்படத் தக்கதேயாம். அச் சாதியின் வரலாறு தேர்ஷ்டன் என்பவர் இங்கிலிசிலே இயற்றிய தென் இந்தியாவின் குலகோத்திரங்கள் என்னும் அரிய நூலிலே விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டு குறித்திருக்கும் சில சங்கதிகளின் சாரத்தினை ஈண்டுத் தமிழிலே தருதும்;

சேலம் மலையாளிகளைப் பற்றிய ஐதிகம்:- இவர்கள் காஞ்சி நகரினின்றும் பத்துத் தலைமுறைக்கு முன்னர், மகமதிய அரசினர் காலத்திலே, சேலஞ் சென்று குடியேறின வேளாண் குலத்தினரான சகோதரர் மூவரின் வம்சத்தவர். அம் மூவருள் மூத்தவன் சேர்வைராயன் மலைக்குச் சென்றனன். நடுவிலான் கொல்லி மலையை நாடினன். இளையவன் பச்சைமலைக்கு இவர்ந்தனன். சேர்வைராயன் மலையைச் சேர்ந்தவன் வம்சத்தார் பெரிய மலையாளிகளென்றும், கொல்லிமலையைக் கொண்டவன் சந்ததியார் சின்ன மலையாளிகள் என்றும் பெயர்பெற்றனர். இவ்வைதிகம் விகற்பமாகவும் விளம்பப் படும்.

கதிராமன் என்னுந் தெய்வம் காஞ்சி நகரில் வெறுப்புற்று வேற்றிடம் புக வெளியேறியது. அதனை வழிபட்டமக்கள் மூவர் பெரியண்ணன், நடுவாண்ணன், சின்னணன் என்னும் பெயரினர். தம் பெண்டு பிள்ளைகளுடன் புறப்பட்டுத் தொடர்ந்து, சேலஞ்சேர்ந்து வெவ்வேறு வழிப்பட்டு, பெரியண்ணன் சேர்வைராயன் மலையினையும், நடுவாண்ணன் பச்சைமலையினையும் அந்தூர் மலையினையும், சின்னணன் மஞ்சவாடியினையும் நண்ணினர்.

2—திருச்சிராப்பள்ளி மலையாளிகளைப் பற்றிய ஐதிகம்;—இது "நாடடுக்கட்டு" என்னும் நாமம் பூண்ட பாடலிலே யுள்ளது. "கச்சி வேந்தர்க்குச் சகோதரரான குருவொருவர் வேந்தனுடன் விவாதப்பட்டு நகர் நீங்கித் தமதாண் மக்கள் மூவருடனும், பெண் மக்களுடனும் சிராப்பள்ளியைச் சேர்ந்தனர். கவுண்டன் எனப் பெயரிய ஜேஷ்டன் (பெரியண்ணன்) சேலஞ் சேர்வைராயன் மலையினையும், துவிதிய புத்திரன் (நடுவாண்ணன்) பச்சை மலையினையும், கனிஷ்டன் (சின்னணன்) கொல்லி மலையினையும் தம் உறைவிடமாகத் தெரிந்து கொண்டனர். அன்னோர் கைக்கோளர், வேடர் முதலிய வெவ்வேறு குலங்களில் மணங்கலந்தனர்.

3—வடஆறுகாட்டுச் சாவடிமலையில் வசிக்கும் மலையாளிகளின் வரலாறு;—கண்குண்டி வேடர் சிலர் கச்சிக் காரைக்காட்டுக் காராளரிடம் பெண் கேட்டுப் பரிகாச நிந்தனைகள் பல பெற்றுக் கோபாவேசங்கொண்டனராய், அக்காராளர்குலக் கன்னியர் எழுவரைக்கவர்ந்து கொண்டு கடிதகன்றனர். அக்கன்னியரை மீட்பான் வேளாண் மைந்தர் எழுவர் நாய் ஒன்றுடன் நகரம் விட்டு வெளிப்போந்தனர். போகு முன்னர்த் தம் தாயமாரை நோக்கி, நாய்கள் திரும்பித் தனியே வருமாயின் உயிர் நீத்தேமென்று உத்தேசித்து, அபரக்கிரியைகள் யாவும் ஆற்றுமின் என்று ஆக்ஞாபித்திருந்தனர்.

இவ்வாறு சொல்லி வழிச் சென்ற வேளாளப் பிள்ளைகள், வெள்ளப் பெருக்குள்ள பாலாற்றினை அதி பிரயாசையுடன் கடந்து அக்கரைப் பட்டனர். நாய்களோ நட்டாறு வரையும் நீந்தி மேற் போகாது மீண்டு வீடு நோக்கி விரைந்து செல்லலாயின. அப்புரோகதிரன் வீடுவந்து சேரக் கண்ட, காதன் மனைவியர் தம் காதலர் மாண்டனர் என்று துணிந்து தாம் செய்யவேண்டிய கடன்கள் அனைத்தினையும் கிரமமே செம்மை பெறச் செய்து முடித்தனர்.

ஆறு கடந்த வாடவர், வேடுவர் பக்கனுஞ் சென்று, கன்னியரைக் கவர்ந்தவரான காளையரைக் கோறல் செய்து, பின்னர்த் தத்தம் மனைகட்கு மீள்வாராயினர். தாம் மாண்டனர் என்று மதித்துக் கலன்கழி மடந்தையராயின மாண்புடை மனைவியரைக் காணலாயினர். அத் தோஷத்தினாலே சாதிப்பிரஷ்டராகி வேட்டுவ மங்கையரை மணந்து, சாவடி மலையினையே தம் உறைவிடமாக்கி உழவு தொழிலை மேற் கொண்டு, மலையாளி எனப் பெயரிய குலத்துக்கு மூதாதையராயினர்.

4 மலையில் வசித்த வேட்டுவ ஆடவரைக் கொலை செய்து, அக்குல வனிதையரை வதுவை செய்தவரே மலையாளிகள் என்பது தென் ஆறு காட்டுக் கன்ன பாரம்பரையாகும்.

5 மலையாளிகளின் பட்டங்களும் மறுநாமங்களும்:—காரைக்காட்டு வேளாளர் என்ற பெயர் குடிமதிப்புக் கணக்கிலே குறிக்கப்பட்டுள்ளது.

கொங்கு வேளாளர் என்னும் ஆக்குவயம் தென் ஆறு காட்டு மலையாளராலே வழங்கப் படுவது.

காஞ்சி மண்டலம் என்னும் மங்கலப் பெயரினைச் சேர்வைராயன் மலையிலுள்ளார் செப்புவர். வேளாளன், காராளன் என்று விளம்புவார் சிலர். மலைக்காரன், மலைநாய்க்கன் என்பர் வேறு சிலர். யாவரும் கௌண்டன் என்னும் பட்டப் பெயரினை உடையராம்.

தம் முன்னோர் காஞ்சிபுரங் காராளர் என்றும் கதிராமனைக் கொணர்ந்தார் என்றும், எவ்விடத்து மலையாளிகளும் இயம்புகின்றமையும், தென்ஆறுகாட்டு மலையாளிகளின் மணச்சடங்கிலே, மாங்கல்யதாரணஞ் செய்யச் சிறிது முன்னர், குருக்கள், காஞ்சி கதிராமன் என்றற் றொடக்கத்துப் பாட்டொன்று படிக்கின்றமையும், மலையாளிகளைப் பற்றிய வரலாற்றினை வலியுறுத்துஞ் செய்திகளேயாம்.

இத்துணை விருத்தாந்தமுடையராய் விளங்கும் மலையாளிகளையே யாழ்ப்பாணத்தவர் மலையாளர் என்றும், மலையகர் என்றும் வருத்தனர் என்பது எவர்க்கும் எளிதிற் புலனாகும். மலையாளன், மலையகன் மலைக்காரன், மலையாளி என்பன எல்லாம் மலை நாட்டவன் என்னும் பொருள் குறித்த காரணப் பெயர்கள். அதுபற்றியே மலையாளி என்னும் பெயர் மலையாள தேயத்தவர்கட்கும் வழங்கா நின்றது.

மலையாளன், மலையகன் என்னும் வருண நாமங்கள் உலாந்தேச அரசாட்சிப் பத்திரங்களினும், பிற பத்திரங்களினும் வழங்கப்பட்டுள்ளன. இவ்விரு நாமங்களை உள்ளிட்ட யாழ்ப்பாணத்து இடப் பெயர்கள் சில வருமாறு:—

மலையாளன் போயிட்டி—அச்செழு. மலையாளன் வளவு—அச்செழு. மலையாளன்சீமா—அச்சுவேலி தெற்கு, நீர்வேலி. மலையாளன் காடு—கோப்பாய் தெற்கு, அராலி கிழக்கு. மலையாளன் ஒல்லை—உடுவில். மலையகன் வளவு—நீர்வேலி. மலையாளன் தோட்டம்—சுதுமலை. —"யாழ்ப்பாணவைபவ கௌமுதி"

சுதேசநாட்டியம்.

## சத்தியாக்கிரகம்.

### ஓர் சம்பாஷணை.

1

(முற்றொடர்)

